69

69

பரிசுத்த வாரம் உயிர்த்தெழுந்த திருநாள் கீதங்கள்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
14 APR 1944
MADRAS

331

பரி. ஜியார்ஜ் ஆலயம்,
மதுரை.

1944 விலை அணு 2.

பரிசுத்த வாரம்
உயிர்த்தெழுந்த திருநாள்
கீதங்கள்.

14 APR 1944
MADRAS
264.1
326

1

1 ஓசன்னா பாலர் பாடும்
ராஜாவாம் மீட்பர்க்கே
மகிமை, புகழ், கீர்த்தி
எல்லாம் உண்டாகவே.

கர்த்தாவின் நாமத்தாலே
வருங் கோமானே, நீர்
தாவீதின் ராஜ மைந்தன்
துதிக்கப்படுவீர். ஓசன்னா

2 உன்னத தூதர் சேனை
விண்ணில் புகழுவார்;
மாந்தர், படைப்பு யாவும்
இசைந்து போற்றுவார். ஓசன்னா

3 உம் முன்னே குருத்தோலை
கொண்டேகினார் போலும்,
மன்றாட்டு, கீதம், ஸ்தோத்திரம்
கொண்டும்மைச் சேவிப்போம். ஓசன்னா

Q6:4146

4 நீர் பாடுபடும் முன்னே
பாடினர் யூதரும்
உயர்த்தப்பட்ட உம்மை
துதிப்போம் நாங்களும். ஓசன்னா

5 அப்பாட்டைக் கேட்ட வண்ணம்
எம் வேண்டல் கேளுமே
நீர் நன்மையால் நிறைந்த
காருணிய வேந்தரே. ஓசன்னா
ஆமென்.

2

1 தயாள இயேசு தேவரீர்
மாண்பாய்ப் பவனி போகிறீர்!
வெள்ளோலை தூவி கூட்டத்தார்
ஓசன்னா என்றார்ப்பரிக்கிறார்.

2 தாழ்வாய் மரிக்கத் தேவரீர்
மாண்பாய்ப் பவனி போகிறீர்!
மரணம் வெல்லும் வீரரே,
உம் வெற்றி தோன்றுகின்றதே.

3 விண்ணோர்கள் நோக்க, தேவரீர்
மாண்பாய்ப் பவனி போகிறீர்!
வியப்புற்றே அம்மோக்ஷத்தார்
அடுக்கும் பலி பார்க்கிறார்.

4 வெம் போர் முடிக்க, தேவரீர்
மாண்பாய்ப் பவனி போகிறீர்!
நம் ஆசனத்தில் ராயனார்
சுதனை எதிர்பார்க்கிறார்.

5 தாழ்வாய் மரிக்கத் தேவரீர்
மாண்பாய்ப் பவனி போகிறீர்!
நோ தாங்கத் தலை சாயுமே;
பின் மேன்மை பெற்று ஆளுமே. ஆமென்.

3

1 சீர் இயேசு கிறிஸ்து நாமத்தை
எல்லோரும் போற்றுங்கள்;
தூதர்கள்போல அவரை
நீர் வாழ்க என்னுங்கள்.

2 பிசாசின் சிறை மீண்டோரே,
கர்த்தாவைப் போற்றுங்கள்,
அவரை நோக்கி, வல்லோரே,
நீர் வாழ்க என்னுங்கள்.

3 பூலோகத்தார் எல்லோருமே,
மகிழ்ந்து போற்றுங்கள்;
நம் மீட்பராங் கர்த்தாவையே
நீர் வாழ்க என்னுங்கள்.

4 நாம் விண்ணில் சேரும்பொழுதே,
ஓயாமல் போற்றுவோம்;
கர்த்தாவை விண்ணோர் போலவே,
நீர் வாழ்க என்னுவோம். ஆமென்

14 APR 1944
MADRAS

4

பல்லவி.

பவனி செல்கின்றார் ராஜா— நாம்
பாடிப் புகழ்வோம் நேசா

அனுபல்லவி.

அவனிதனிலே மறிமீதேறி
அனந்தம் பரமானந்தம்— பவனி.

சரணங்கள்.

1 எருசலேமின் வீதியே—சுரர்
என்றுந்தொழுஞ்சியோன் பதியே
அருகில் நின்று அனைவர் போற்றும்
அரசே எங்கள் சிரசே— பவனி.

2 பன்னிருவர் ஆடைதரித்து—நின்று
பாங்காய் வஸ்திரம்விரித்து
நன்னயம்சேர் மனுவின்சேனை
நாத கீதம் ஓத— பவனி.

3 குருத்தோலைகள் பிடிக்க—பாலர்
கும்பல் கும்பலாக நடிக்க
பெருத்த தொனியாய் ஓசன்னாவென்று
போற்ற கீத மேற்ற— பவனி.

4 பெரியோர்கள் பலர் தடுக்க—நல்ல
வழியோர்கள் பலர் அடுக்க
தெரியாதோரும் பரிசுத்தாவியால்
தேட அருள் கூட— பவனி.

5 வேதபாரகர் மயங்க—அருள்
வேதசாஸ்திரம் இலங்க
பாதகமதைத் தவிர்த்து ஜெயித்த
பாலா தேவ சீலா— பவனி.

5

பல்லவி

ஓசன்னு பாடுவோம் ஏசுவின் தாசரே
தாவீதின் குமாரனுக்கு உன்னதத்தில் ஓசன்னு

சரணங்கள்

1 முன்னும் பின்னும் சாலேம் நகர் சின்னப்பாலர் பாடினர்
அன்றுபோல இன்று நாமும் அன்பாய் துதிபாடுவோம்.

2 சின்னமறி மீதிலேறி அன்பர் பவனிபோனர்
இன்றும் என் அகத்திலவர் வந்து அரசாளுவார்

3 பாவமதைப் போக்கவும் இப்பாவியைக் கைதூக்கவும்
பாசமுள்ள ஏசையா பவனியாகப் போகிறார்.

4 பாலர்களின் கீதம்கேட்டுப் பாசமாக மகிழ்ந்தார்
ஜாலர்வீணை யோடுபாடி பாதமுத்தி செய்குவோம்.

5 குருத்தோலை ஞாயிறில் நம் குருபாதம் பணிவோம்
திரு அருள்பெற்று நாமும் த்ரியேகரைப் போற்றுவோம்

6

1 என் பாவத்தின் நிவிர்த்தியை
உண்டாக்க அன்பாய் ஜீவனை
கொடுத்து, சிலுவையிலே
மரித்த தேவ மைந்தனே.

2 எல்லாருக்கும் நீர் ரட்சகர்,
தவிப்புள்ளோர்க்குத் தாரகர்
நைந்தோர்க்கு நீர் மா வைத்தியரும்
என்னையும் குணப்படுத்தும்.

3 அநேக பாவஞ் செய்தோனாய்
நிர்ப்பந்தனும் ஏழையுமாய்
உம் திருப் பந்திக்கு வரும்
அடியேனைத் தள்ளாதிரும்.

4 என் பெலவீனங் கண்டீரே,
உம் பெலன் ஈயும், இயேசுவே;
அசுத்தனான என்னையும்
நீர் சுத்தமாக்கியருளும்.

5 இருண்ட நெஞ்சில் ஒளியும்
மெய்ஞ்ஞானம் விசுவாசமும்
ஈந்து என் பாதை காணவே
பிரகாசியும், மா ஜோதியே. ஆமென்.

7

1 ஆத்துமாவே, உன்னைஜோடி,
அந்தகாரத்தை விட்டோடி,
ஒளியண்டை வந்துசேரு,
மகிமை அடைந்து தேரு;
உனக்கின்று தயவுள்ள
கர்த்தர் தமது அன்புள்ள
பந்தியில் புசிக்கத் தாறூர்,
உன்னண்டைக்குத் தங்க வாறூர்.

2 ஆ, இப்போஜனத்தின் மேலே
வாஞ்சை உண்டிம்மானு வேலே
நீர் சஞ்சீவியாய்க் கொடுக்கும்
ஊணின் மேல்பசி யிருக்கும்;
இந்த ஜீவ பானத்தாலே
தாகந் தீர்க்க ஆசையாலே
ஏங்குகிறேன், ஆ, நன்ருக
நான் உம்மோடே ஐக்யமாக.

3 வான மகிமையை விட்டு,
சிலுவையிலே மரித்து,
உம்முடைய ரத்தஞ் சிந்த
உம்மில் தீயைப்போல் எரிந்த
அன்பினுலே நான் நிறைய
எனக்கு நீர் உம்முடைய
மாமிசத்தை உண்ணத் தாறீர்,
ரத்தமும் இறைக்க வாறீர்.

4 ஜீவனின் மெய்யப்பமான
இயேசுவே, ரட்சிப்புக்கான
இந்தப் பந்திக்கு வீணாக
அல்லதெனக்குக் கேடாக
நான் சேராமல், இதினாலே
உம்முடைய நேசத்தாலே
நான் நிரம்பி விண்ணிலேயும்
சாப்பிட நீர்தயை செய்யும். ஆமென்.

8

1 பூங்காவில் நீர்மனக் கஸ்தியடைந்ததால்,
பூங்காவில் நின்வேர்வை ரத்தமாய் போனதால்,
பூங்காவில் மும்முறை குப்புற வீழ்ந்ததால்,
பூங்காவில் ஓர் தூதன் தேறுதல் செய்ததால்,
பூலோகங் காருமையா—எந்தன்
பாவங்கள் தீருமையா.

2 ராவில் யூதாசும்மைக் காட்டிக் கொடுத்ததால்,
ராவில் அங்குமிங்கும் ஓடித் திரிந்ததால்,
ராவில் நித்திரையின்றி துன்பம் சகித்ததால்,
ராவில் கற்றூணோடே கட்டி யடித்தால்,
நாயனே காருமையா, சுவாமி—எந்தன்
பாவங்கள் தீருமையா.

3 சின்னப் படுத்தியே கோரணி செய்ததால்,
சீஷன் ஒருவன் சபித்து மறுத்ததால்,
சென்னியில் ஓர் அறை ஓங்கி அடித்ததால்,
மன்னன் ஏரோதே மறுவேஷம் போட்டதால்,

என்னைக்கண் பாருமையா, சுவாமி—எந்தன்
பாவங்கள் தீருமையா.

4 சிரசினில் முண்முடி தன்னைத் தரித்ததால்,
செங்கோ லென்றழுங்கில் கோலைக் கொடுத்ததால்,
திருமுகந் தன்னிலே துப்பி உமிழ்ந்ததால்,
திருட்டுத் தனமாகக் கும்பிட் டடித்தால்,
தேவனே காருமையா, சுவாமி—எந்தன்
பாவங்கள் தீருமையா.

5 எருசலேம் மனிதர்கள் பொய்க்குற்றஞ் சொன்னதால்,
எருசலேம் அதிபதி ஏராத்தீர்ப் பிட்டதால்,
எருசலேம் விட்டுநீர் கல்வாரி போனதால்,
எருசலேம் பெண்கள் இரங்கி யழுததால்,
என்னைக்கண் பாருமையா, சுவாமி—எந்தன்
பாவங்கள் தீருமையா.

6 பாரச் சிலுவையைத் தோள்மேல் சுமந்ததால்,
பாரத்தாலே தள்ளம் பாரி நடந்ததால்,
பாதகச் சேவகர் ஆடை யுரிந்ததால்,
பாவிகள் அவ்வேளை நிஷ்டூரஞ் செய்ததால்,
பாவியைக் காருமையா, சுவாமி—எந்தன்
பாவங்கள் தீருமையா.

7 கனத்த ஆணியால் கைகளில் அடித்ததால்,
கனத்த ஆணியைக் கால்களில் அறைந்ததால்,
கனத்த தேகத்தால் காயங்கள் பிய்ந்ததால்,
கனத்த வெள்ளரத்தம் ஈட்டியால் பாய்ந்ததால்,
கன்னெஞ்சம் மாற்றுமையா, சுவாமி—அடியேன்
துன்பங்கள் தீருமையா.

8 சிலுவையில் ஏற்றியே தொங்கவே வைத்ததால்,
சிலுவையில் ஓர்கள்ளன் சிறுமையே செய்ததால்,
சிலுவையில் அகோர தாகம்நீர் கொண்டதால்,
சிலுவையில் காடியோர் கோலில் கொடுத்ததால்
சிந்தையில் காருமையா, சுவாமி—அடியேன்
துன்பங்கள் தீருமையா.

9 சிந்தை கலங்கிநீர் தீயர்க் கழுததால்,
சீரான மாதாவும் அழுதுமுன் நின்றதால்,
சீடர்க ளெல்லோரும் ஓடிப்போய் விட்டதால்,
சீவனின் அதிபதி சிலுவையில் மாண்டதால்,
சிந்தையில் காருமையா, சுவாமி—அடியேண்
துன்பங்கள் தீருமையா.

10 உம்மை இறக்கிக் கிடத்தியே வைத்ததால்,
உம்மைத் துணியாலே சுற்றிப் பொதிந்ததால்,
உம்மைப் புதுக்கல் லறையில் புதைத்ததால்,
உம்முட ஆவி பரதீசு சென்றதால்,
என்னைக்கண் பாருமையா, சுவாமி—அடியேன்
பாவங்கள் தீருமையா.

9

பல்லவி.

அன்பரின் நேசம் ஆர் சொல்லலாகும் ?—அதிசய

அனுபல்லவி.

துன்ப அகோரம் தொடர்ந்திடும் நேரம்.

சரணங்கள்.

1 இதுவென் சரீரம், இதுவென்தன் ரத்தம்,
எனை நினைத்திடும்படி அருந்து மென்றாரே.

2 பிரிந்திடும் வேளை நெருங்கினதாலே
வருந்தின சீஷர்க்காய் மருகி நின்றாரே.

3 வியாழ னிரவினில் வியாகுலத் தோடே
விளம்பின போதகம் மறந்திட லாமோ.

4 செடியும் கொடியும்போல் சேர்ந்துதம் மோடே
முடிவு பரியந்தம் நிலைப்பீரென்றாரே.

5 பக்தர்கட்காக பரமனை நோக்கி
மெத்தவும் ஊக்கமாய் வேண்டிக் கொண்டாரே.

10

1 கண்டீர்களோ சிலுவையில்
மரிக்கும் இயேசுவை?
கண்டீர்களோ காயங்களில்
வடியும் ரத்தத்தை?

2 'மன்னியும்' என்ற வேண்டலை
கேட்டீர்களே, ஐயோ!
'என் கைவிட்டீர்' என்றார்; அதை
மறக்கக் கூடுமோ?

3 கண்மூடி, தலைசாயவே,
'முடிந்தது' என்றார்,
இவ்வாறு லோக மீட்பையே
அன்பாய் உண்டாக்கினார்.

4 அவ்வேண்டல், ஓலம், காயத்தால்
ஈடேற்றம் வந்ததே;
ஆ பாவீ, இதை நோக்குங்கால்
உன் தோஷந் தீருமே.

5 சீர்கெட்டு மாண்டுபோகையில்
நான் வந்தேன் குருசண்டை;
கண்டேன், கண்டேன் சிலுவையில்
மரிக்கும் இயேசுவை. ஆமென்.

11

1 பாவ நாசர் பட்ட காயம்
நோக்கித் தியானஞ் செய்வது
ஜீவன், சுகம், நற்சகாயம்,
ஆறுதலும் உள்ளது.

2 சிலுவையை நோக்கி நிற்க,
உமதருள் உணர்வேன்;
தீர்த்த ரத்தம் நெஞ்சில்பட,
சமாதானம் பெறுவேன்.

3 அவர் சிலுவை அடியில்
நிற்பதே மா பாக்கியம்;
சேர்ந்த திரு முகத்தினில்
காண்பேன் திவ்விய உருக்கம்

4 உம்மை நான் கண்ணாரக்காண
விண்ணில் சேரும் அளவும்,
உம்மை ஓயாத் தியானஞ் செய்ய
என்னை ஏவியருளும். ஆமென்.

12

1 ஆ, ரத்தம், காயம், குத்தும்
நிந்தையும் நிறைந்தே,
முட்கிரீடத்தாலே சுற்றும்
குத்துண்ட சிரசே,
முன் சால மேன்மை கொண்ட
நீ நிந்தை காண்பதேன்?
ஐயோ, வதைந்து நொந்த
உன் முன் பணிகிறேன்.

2 நான் உம்மைத் தாழ்மையாக
வணங்கி, நித்தமே
நீர் பட்ட கஸ்திக்காக
துதிப்பேன், இயேசுவே;
நான் உம்மில் ஊன்றிநிற்க
சகாயராயிரும்;
உம்மோடு நான் மரிக்க
நீர் தயை செய்திடும்.

3 என் மூச்சொடுங்கும் அந்த
கடை இக்கட்டிலும்
நீர் எனக்காய் இறந்த
உம் கோலங் காண்பியும்
உம் சிலுவையைப் பார்த்து
உம் நேச மார்பிலே
அன்புடன் நானுஞ் சாய்ந்து
அங்கட்டும், இயேசுவே. ஆமென்.

13

1 துக்கங் கொண்டாட வாருமே,
பாரும்! நம் மீட்பர் மரித்தார்;
திகில் கலக்கங் கொள்ளுவோம்;
இயேசு சிலுவையில் மாண்டார்.

2 போர்வீரர், யூதர் நிந்தித்தும்
மா பொறுமையாய்ச் சகித்தார்;
நாமோ புலம்பி அழுவோம்;
இயேசு சிலுவையில் மாண்டார்.

3 கை, காலை ஆணி பீறிற்று,
தவனத்தால் நா வறண்டார்;
கண் ரத்தத்தாலே மங்கிற்றே;
இயேசு சிலுவையில் மாண்டார்.

4 நரர்க்காய்த் திவ்விய அன்பினால்
மா மௌனமாய் மன்றாடினார்;
நல் ஏழு வார்த்தை உரைத்து,
இயேசு சிலுவையில் மாண்டார்.

5 அவர் விலாவின் உதிரம்
திவலையாய் நம்மேல் விட்டார்;
அவர் பாதத்தைப் பணிவோம்;
இயேசு சிலுவையில் மாண்டார்.

6 ஆ இயேசு ஸ்வாமி, தாசர்க்கு
பெருகிப் பாய்ந்திடுங் கண்ணீர்,
உருகும் நெஞ்சும் ஈயுமே.
நீர் சிலுவையிலே மாண்டீர். ஆமென்.

14

பல்லவி.

குருசினில் தொங்கியே குருதியும் வடிய,
கொல்கதா மலைதனிலே—நம்
குருவேசு சுவாமி கொடுந்துயர், பாவி,
கொள்ளாய் கண்கொண்டு.

சரணங்கள்.

1 சிரசினில் முண்முடி உறுத்திட, அறைந்தே
சிலுவையில் சேர்த்தையோ!—தீயர்
திருக்கரங் கால்களில் ஆணிகளடித்தார்
சேனைத் திரள் சூழ. குரு

2 பாதகர் நடுவில் பாவியினேசன்
பாதகன்போல் தொங்க—யூத
பாதகர் பரிகாசங்கள் பண்ணி
படுத்திய கொடுமைதனை. குரு

3 சந்திர சூரிய, சகலவான் சேனைகள்
சகியாமல் நாணுதையோ!—தேவ
சுந்தர மைந்தனுயிர் விடுகாட்சியால்
துடிக்கா நெஞ்சுண்டோ? குரு

4 ஈட்டியால் சேவகன் எட்டியே குத்த
இறைவன் விலாவதிலே—அவர்
தீட்டிய தீட்சைக் குருதியும், ஜலமும்
திறந்தூற்றோடுது, பார். குரு

5 எருசலே மாதே, மறுகி நீயழுது
ஏங்கிப் புலம்பலையோ?—நின்
எருசலையதிபன் இளமணவாளன்
எடுத்தகோல மிதோ? குரு

15

1 பிதாவே தாங்கள் செய்வ
தேதென்று அறியார்
மாதயவாய் இவர்க்கே
மன்னிப்பீர் என்கிறார்.

2 போதனையில் மன்னிப்பை
புகட்டின குரு
சாதனையால் ரூபித்தே
சற்சனர் காட்டினர்.

3 கைகாலில் ஆணிபாய்ந்தே
கஸ்திவாதை யோடே
வைதேகொல் வோருக்காமே
வானவன் மன்றாட்டே.

4 வீற்றும் வெறுத்தும் வீணாய்
விரைந்து அறைந்தும்
குத்தி கொலை புரிந்த
குரூரன் நான் அல்லோ.

5 அப்பாதகரில் நானும்
ஆனேன் ஒருவனும்
இப்பாவிக்கும் மால் வேணும்
செப்பேலா மன்னிப்பும்.

6 செந்நீரை சிந்திமீட்ட
ஜீவாதி பதியே
மன்னிப்பீர் எங்கள் பாவம்
மகிமை ரவியே.

ஆமென்.

16

1 இன்னிய முகமலர்ந்து இருதயத்துருகு மன்பால்
உன்னத தேவமைந்தன் உலகின்பாற் கருணைகூர்ந்து
'மன்னிப்பீர், என்பிதாவே, மதலைகளிவர்கள் குற்றம்
மன்னிப்பீர்' என்றுருகும் மனுவுக்கே ஆமென் என்பீர்.

2 பதிலுக்குப்பதில் செயென்ற பழமைப்ர மாணமாற்றிப்
புதியதங் கற்பனையைப் புவியதில் நாட்டவந்த
கதிதருங் கருணைமூர்த்தி கருணையுற் றுருகித்தம்மை
வதைத்திடும் யூதர்கட்காய் வருந்தியேஜெபித்துநின்றாய்.

3 விற்றதும் வீணன்நானே; வெறுத்ததும் வீணன்நானே;
அலைத்ததும்அடிமைநானே;அறைந்ததும்அடிமைநானே;
குத்தின கோரன்நானே; கொலை புரிந்தவனும் நானே
இத்தனை பாவம்செய்தேன்;இரங்கியாட் கொள்ளுமையா.

4 மன்னிப்பீர் எந்தன்பாவம் மைந்தர்தம் சிலுவைநோக்கி
மன்னிப்பீர் எந்தன்பாவம் மைந்தர்ஐங் காயம்நோக்கி;
மன்னிப்பீர் எந்தன்பாவம் மரிக்கும்தம் மைந்தர்நோக்கி;
மன்னிப்பீர் எந்தன்பாவம், மன்னிப்பீர் ஆமென்,ஆமென்

17

1 இன்றைக்கு என்னுடனே
இருப்பாய் பரதீசில்
என்று வாக்களித்தவா
எம்மையும்நீ ரேற்கவா.

2 கள்ளன் உந்தன்ராஜ்ஜியம்
கஸ்திப்பட்டுச் சேர்ந்தனன்
வள்ளலேயாம் அவ்விதம்
வந்துசேர அருளும்.

3 பக்கம் தொங்கும் கள்ளனை
பரீசுக் கும்மிடம்
சேர்க்கச் சித்தம் கொண்டவா
சேர்த்தெமை யாட்கொள்ளவா.

4 அலைசூழும் பூவிலே
நிலையில்லா வாழ்விலே
மலைவின்றிக் காத்துமே
நிலைபெறச் செய்யுமே.

5 உத்தம மனஸ்தாப
பக்திக் கண்ணீர்வடிக்கும்
பித்தரைநின் ராஜ்ஜியம்
வித்தகனே சேர்த்திடும்.

ஆமென்.

18

1 என்னுடன் பரதீசில் இருப்பாய் இன்று என்றீர்-ஏசுநாதா
ஏழைப்பாவிக்கும் அந்த நல்வாக்கு அருளுமேன் ,,
உம்முடன் நானுமிருக்க ஆசிக்கிறேன் ,,
உம்முடராஜ்ஜியம் என்னையும் கொண்டுபோம் ,,

2 கள்ளன் உன்ராஜ்ஜியம் சேர மன்றாடினான் ,,
இந்தக்கள்ளனும் அவ்விதம் மன்றாடி நிற்கிறான் ,,
கள்ளன்உம் பக்கத்தில் கூடப்பாடு பட்டான் ,,
இந்தக்கள்ளனும் லோகத்தில் கஸ்திபொறுக்கச்செய் ,,

3 கள்ளனுக் கருகில் உம் சிலுவை நாட்டி ஏசுநாதா
கள்ளனை உம்மிடம் சேர்த்துக் கொண்டதுபோல் ,,
கள்ளன் என்நெஞ்சிலும் உம் சிலுவைநாட்டி ,,
கள்ளனையே பரிசுத்தமும் ஆக்குவீர் ,,

4 துன்பமும் துக்கமும் என்னைச் சூழும்போது ,,
அன்பைப் பெருக்கி அருட்கண்ணால் பார்த்திடும் ,,
இன்பமான சொல்லும் எவ்விதத் தீர்க்கமும் ,,
என்சாவு நேரத்தில் நீர்அளிப்பீர், ஐயா! ,,

19

1 சிலுவையைப் பற்றி நின்று
துஞ்சும் மகனைக் கண்ணுற்று,
விம்மிப் பொங்கினார் ஈன்றாள்;
தேவமாதா மயங்கினார்;
சஞ்சலத்தால் கலங்கினார்;
பாய்ந்ததாத்துமாவில் வாள்.

2 பாக்கியவதி மாதா உற்றார்
சிலுவையை நோக்கிப் பார்த்தார்;
அந்தோ, என்ன வேதனை!
ஏகபுத்திர னிழந்து,
துக்கசாகரத்தில் ஆழ்ந்து,
சோகமுற்றனர் அன்னை.

3 தம்குமாரன் காயப்பட,
முட்கிரீடஞ் சூட்டப்பட,
இந்த நிந்தை நோக்கினார்,

நீதியுற்ற தீர்ப்புப்பெற,
அன்பர், சீஷர் கைவிட்டோட
அவர் சாகவுங் கண்டார்.

4 அன்பின் ஊற்ரும் இயேசு ஸ்வாமி,
உமதன்னைக்குள்ள பக்தி,
என்றன் நெஞ்சில் ஊற்றிடும்;
அன்பினுல் என் உள்ளம் பொங்க,
அனல் கொண் டகம் உருக
அருளைக் கடாட்சியும். ஆமென்.

20

என் செய்வேன், மகனே, நான்,
இதற்கோ பெற்றெடுத்தேன்?
இறையோ, பவசோதனையோ,
இப்படி முடிந்திட.

1 ஐயையோ, பாலகனே, அதிசயமாய் வந்துதித்து [னையோ
அருமையாய் வளர்ந்தனையோ-இங்-கவதிக்குள் ளமைந்த
அருமைத் திருமைந்தனே, வயிறெரியுதையோ—என்செய்

2 முப்பத்துமூன்ருண்டாய்முதுமொழிமேற்கொண்டொழுகி
முன்ஞேர்கள்மொழிந்ததிரு வாக்கியமெலாம்நிறைவேற்றி
முடித்தேன், நரரைவிடுத்தேன்; ஜெயித்தேனே.
என்செய்வேன், தாயே, நான் இதற்கே யவதரித்தேன்;
இனி இவ்வுலகின் வழிபா டென்னுடைய தாகுமோ?

3 பாலன் உனைப்பறிகொடுக்க-இப்-பாழ்மனது பதைக்குதை
பாருலகில் எனக்கினியோர் பற்றுவேருருமில்லை [யோ
பாவிநான் போம்வழி பகர்ந்திடுவாய் மகனே—என்செய்.

4 அன்புள்ள சீஷன் இனி-யுமக்-காறுதல் என்தாயே;
அணைத்திடுவாய், அம்மாளை ஆதரித்திடுவாய், அப்பனேநீ;
அன்னையும் மகனும் அருள்பெற்றோங்கிடுவீர்.
என்செய்வேன், தாயே, நான் இதற்கே யவதரித்தேன்,
இனிநான் பரதீசடைய இன்பவிடை கூறுவீர்.

5 போய்வாரும், என்சுவாமி போதும்உமைப் பெற்றபாக்யம்
போய்வாரும், இனியுமைநான் பார்த்திடுவேன் பரதீசில்;
பணிந்தேன் திருத்தாள், குவித்தேன்சிரமேற்கை-என்செய்

21

1 என்னை தேவா கைவிட்டீர்
என்று க்ருசில் இருளில்
மன்றாடி பிதாவிடம்
மைந்தன் அபயமிட்டார்.

2 நீண்ட குருசாசனு
நின்முக தரிசனம்
மாந்தர் அறியாமலே
மாண்பாய் இருள்மூடிற்றே.

3 சாவின்நிழல் நீடவும்
சாத்தான் வெறுண்டோடவும்
சாவின் வினைமூடவும்
கர்த்தன் மௌனமானீரே.

4 வான்புவி தாராகணம்
வன்கரத்தில் தாங்குவோன்
தான் 'ஏலிஏலிலாமா
சபக்தானி' என்கிறார்.

5 சாவின் அந்தகாரமே
மேவிமூடும் நேரமே
தாவியந்த வேளையில்
தப்பாதெமை காருமே. ஆமென்.

22

1 என் தேவனே, தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்
என்று கதறும் வார்த்தை—என்னையா, தயாபரரே,
என் செவியிற் கேட்கலையோ ?
சாவின் இருள்மூட, சாத்தானும் போராட,
நோவினால் ஏங்கி—என்னையா, தயாபரரே,
நொந்து கூப்பிட்டீரோ?

2 தேவ சந்நிதி மறைய, ஜெகத்தில் இருள் நிறைய
தேவ சுதனே, நீர்—என்னையா, தயாபரரே,
செய்தமுறைப் பாடிதுவோ?
வானத்தையும் பூமியையும் வன்கரத்தில் தாங்குகின்ற
மட்டில்லா வல்லபத்தை—என்னையா, தயாபரரே,
என் மா பாவம் மாற்றினதோ?

3 என் தேவனே யென்று என் ஆபத்தில் நானும்
உன்னதத்தை நோக்கி—என்னையா, தயாபரரே,
உருகியழச் செய்யுமையா;

என் என்னைக் கைவிட்டீர் என் ஏசுவேயென்று
ஏழை இடுஞ் சத்தம்—என்னையா, தயாபரரே,
இரக்கமாய்க் கேளுமையா.

4 சாவின் அந்தகாரம் கதியோனின் சோதனைகள்
தாவு மந்த வேளை—என்னையா, தயாபரரே,
தப்பாமல் காருமையா;
நோவின் அவதியால் நான் நொந்து கதறும் வேளை
பாவிக்காய் பட்ட இந்த—என்னையா, தயாபரரே,
பாடுகளை நோக்குமையா.

23

1 தாகமா யிருக்கிறேன்
சோகம் தீர்க்கயாருமே
ஏகன் பக்கமில்லையோ?

2 ஆறு ஏரி அமைத்தோன்
ஆழி யாவு மிசைத்தோன்
மீறி தாக மானீரோ?

3 தீர்க்கர் வாக்குப்படியே
மூர்க்கர் காளான் காடியே
மார்க்க மின்றி ஈந்தனர்.

4 தர்ம ஊற்றுத் திறந்து
கர்மம் யாவுந் துறந்தோர்
தாகமா யிருக்கின்றார்.

5 தாரணியோர் ஆத்துமா
தாண்டிக் கரை ஏறவா
தாக மானீர்த் யாகையா.

6 நுங்கள் ஞான ஈவிலே
எங்கள் ஆத்ம தாகமே
தங்க அருள் தாருமே. ஆமென்.

24

1 தாபமாய்க் கொல்கதாவின் கொடுமுடி
தர்மசிலக்கு பாநதிநீர்
தரணியோரின் தரணியோரின்
தரணியோரின்பே ராத்ம ரட்சிப்புக்கேங்கியே
தாகமானீரோ?

2 தாகமாக விருக்குமெப் பேர்களும்
தண்ணீரோடைக்கு வாரீரிதோ
தர்ம ஊற்று தர்ம ஊற்று
தர்ம ஊற்று கல்வாரி மேட்டினிலோடுது,
தாகந்தீரீரோ?

3 கானமான் நன்னீ ரோடையை வாஞ்சித்துக்
காதலுற்றுக் கதறுமாப்போல்,
கருணை மீட்பர் கருணை மீட்பர்
கருணை மீட்பர்பாற் றுகமுற்றிட, கர்த்தனே
கிருபை கூர்வீர்.

4 உந்த னுத்மாவி யாகுல மேவிட்டும்
எந்தனுத்ம ஈடேற்றத் துக்காய்
இறைவனே நீர் இறைவனே, நீர்
இறைவனே நீரிப்பாடு ஏற்றதற்காயுமக்
கென்றும் ஸ்தோத்திரமே.

25

1 பூரண ஜீவியமே
தேவா சனம் விட்டு
தாம்வந்த நோக்கம் யாவுமே,
இதோ முடிந்தது.

2 பிதாவின் சித்தத்தை
கோதர முடித்தார்;
தொல்வேத உரைப்படியே
கஸ்தியைச் சகித்தார்.

3 அவர் படாத் துக்கம்
கரர்க்கு இல்லையே;
உருகும் அவர் நெஞ்சிலும்
நம் துன்பம் பாய்ந்ததே.

4 முள் தைத்த சிரசில்
நம் பாவஞ் சுமந்தார்;
நாம் சுத்தராகத் தம் நெஞ்சில்
நம் ஆக்கினை ஏற்ருர்.

5 எங்களை நேசித்தே,
எங்களுக்காய் மாண்டீர்;
ஆ, சர்வ பாவப் பலியே,
எங்கள் சகாயர் நீர்.

6 எத்துன்ப நாளுமே,
மா நியாயத் தீர்ப்பிலும்,
உம் புண்ணியம் தூயமீட்பரே,
எங்கள் அடைக்கலம்.

7 இன்னும் உம் கிரியையை
எங்களில் செய்திடும்
நீர் அன்பாய் ஈந்த கிருபைக்கே
எம் அன்பு ஈடாகும். ஆமென்.

26

1 மூச்சொடுங்கும் நேரம் முடிந்தது என்றீரோ — ஏசுநாதா
மூவருஞ் செய்த ஆலோசனை முடிந்ததோ ,,
ஆவியால் பேசின தீர்க்கரின் வார்த்தைகள் ,,
மேவிச் சிலுவையைத் தாவி முடிந்ததோ ,,

2 முந்தின ஏற்பாடு முன்னடையாளங்கள் ,,
முற்றும் மறைந்து முழுவதும் முடிந்ததோ ,,
தேவாசனம் விட்டுப் பூதலம் நீர்வந்த ,,
தேவசித்தம், நோக்கம் யாவும் முடிந்ததோ ,,

3 மாண்டு மனிதரை மீண்டு கொண்டதினல் ,,
மானிட ரட்சிப்பு முற்றும் முடிந்ததோ ,,
மீட்பின் கிரியையில் பாக்கி யில்லாமலே ,,
மீட்கப் பட்டோர்களின் லக்கம் முடிந்ததோ ,,

4 என் துன்பம் துக்கம் எல்லாம் முடிந்துபோச்சே ,,
ஏழையிதற்கு நான் என்ன பதில்செய்வேன் ,,
இன்னமும் உம்முட ஆவியின் வேலையை ,,
என்னில் முடித்து ஈடேறவே செய்திடும் ,,

5 எந்தனுக்குக் கட்டளை யிட்ட வேலையை ,,
உந்தன் கிருபையால் நான் முடிக்கச்செய்யும் ,,
சுந்தர மோட்சத்தில் என்ரட்சிப்பை முடித்து ,,
வந்து இளைப்பாறத் தந்துதவிசெய்யும் ,,

27

1 மரிக்கும் கிறிஸ்தின் ஆவியும்,
வதைக்கப்பட்ட தேகமும்,
என் தேகம் ஆவி யாவையும்
நன்றாய்க் குணப்படுத்தவும்.

2 அவர் விலாவில் மிகவும்
பொழிந்த ரத்தம், தண்ணீரும்
என் ஸ்நானமாகி, எனக்கு
உயிர்தரக் கடவது.

3 அவர் முகத்தின் வேர்வையும்,
கண்ணீர், அவஸ்தை, துக்கமும்
அந்நாளின் தீர்ப்பழிப்புக்கும்
இப்பாவியை விலக்கவும்.

4 ஆ, இயேசு கிறிஸ்தே உம்மண்டை
ஒதுக்கைத் தேடும் ஏழையை
நீர்பட்ட காயங்களிலே
மறையும், நீர் என் மீட்பரே.

5 என் மரண அவஸ்தையில்
நீர் என்னைத்தேற்றி, மோட்சத்தில்
நான் என்றும் உம்மைத்தொழவே,
வரவழையும் கர்த்தரே. ஆமென்.

28

1 கன்னிமரி பாலனே கருணைமனு வேலனே
எங்கள் பாவங்களைப் பொறுத்துக் கொள்ளும் சுவாமி.

2 குருசிலறை யுண்டவா குருசிலுயிர் மாண்டவா
எங்கள் பாவங்களைப் பொறுத்துக் கொள்ளும் சுவாமி.

3 ஐந்துதிருக் காயனே அண்டினோர் சகாயனே
சிலுவை அண்டினோம் உமதடைக்கலம் சுவாமி.

4 தாவீதின் மைந்தனே தமியோர் துறந்தனே
எங்கள் பாவங்களைப் பொறுத்துக்கொள்ளும் சுவாமி.

5 உதிரப்பிர வாகனே உலகோர் பவநாசனே
சிலுவை அண்டினோம் உமதடைக்கலம் சுவாமி.

6 செய்யமறை நாட்டியே தேவாட்டுக் குட்டியே
சிலுவை யண்டினோம் உமதடைக்கலம் சுவாமி.

7 பரிசுத்த எசுவே பரலோக ராஜனே
பாவ மன்னித்தோம் என்பீர் சுவாமி.

8 வல்லவல வாகனே மன்றாடு தாரனே
பாவ மன்னித்தோம் என்பீர் சுவாமி.

9 பாவவி மோசனனே பாவியோர் நேசனே
பாவ மன்னித்தோம் என்பீர் சுவாமி.

10 சந்ததம் பிதாவே சுதனைத்தந்த எகோவாவே
சரணம் சரணமே ஆமென் சுவாமி.

11 அர்சிஷ்ட ஆவியே ஆகாதிரி யேகரே
அனந்த சரணமே ஆமென் சுவாமி.

12 தன்னுயிர் தந்தவா சாகா துயிர்த்தவா
சரணம் சரணமே ஆமென் சுவாமி.

29

1 தந்தையே இவர்க்குமன்னி, தாம்செய்வ தின்னதென்று
சிந்தையிலு ணர்ந்திடாதே செய்கிறார்; எனக்இவ்வாதை!
எந்தையே எளியேன்பாவம் இரங்கியே பொறுதியென்றே
உந்தையின் வலமேநின்றே உரைத்திடாய் உரிமைநாதா.

2 அன்றுமெய் மனஸ்தாபத்தோ டடியேனை நினையுமென்றே
மன்றாடு சோரன்தேற மலர்திருவாய் திறந்தே,
இன்றைக்கென் னோடேகூட ஏகமாய்ப் பரதீசின்கண்
சென்றுநீ வாழ்வாயென்றீர், தீயனுக் கிரங்காய்நாதா!

3 அன்பின் சீடனையேநோக்கி,அதோவுனின்தாய் என்றோதி
பின்புநின் தாயைநோக்கி பிள்ளையதோ வென்றோதிக்
குன்றிடா தன்பின்கட்டைக் குவலயத் தமைத்தீரையா!
இன்றென தேங்கல்தீர்ப்பாய், இறைவனே, உரிமைநாதா!

4 என்தேவா, என்தேவா நீர் ஏனெனைக் கைவிட்டீர்
என்றுமா தொனியாய்க் கூறி யிடர்கொடு துயரமானீர்
என்றுமுன் சமுகம்நீங்கி எரிசுரகாளா மென்னைப் [தா
பொன்றிடா துயிர்தந் தேற்பாய், பொன்னடிக் கபயம்நா

5 உதிரமூற் றுண்டேபோக, உஷ்ணமே சடலந்தாவ
நதிகடல் முதிரஞ்செய்தோய் நாவறண் டகமேசோர்ந்து,
முதுமறைப்படி யேதாக முற்றனேனென்றாய் அப்பா!
ததியிலென் தாகந்தீர்ப்பாய், தற்பரா, உரிமைநாதா!

6 திருமறை யடையாளங்கள் தீர்க்கர்முன் னுரைகள்தேவ
திருணய மெல்லாந்தீர்ந்து நிறைவுனி லடைதல்கண்டு
முருகொளிர் வாய்திறந்தே முடிந்ததென் றுரைத்தீரையா!
இருமையென் பங்கேதாராய், என்னையாள் உரிமைநாதா!

7 அப்பனே, உமதுகையென் ஆவிஒப் படைத்தேனென்று
செப்பியுன் சிரமேசாய்ந்து ஜீவனை விடுத்தீரையா!
ஒப்பிலா உரைசொல்வாயா? உலகமே புரக்குந்துயா!
அற்பனென் ஆத்மநேயா, அருள்தராய் உரிமைநாதா!

30

சிலுவைச் சரிதை.

I. கேள்வி.

1 தம் ரத்தத்தில் தோய்ந்த அங்கி போர்த்து
மாதர் பின்புலம்ப நடந்து.

2 பாரமாங் குருசால் சோர்வுறவே,
துணையாள் நிற்கின்றான் பாதையே,

3 கூடியே செல்கின்றார் அப்பாதையே,
பின்னே தாங்குகின்றான் சீமோனே.

4 குருசைச் சுமந்தெங்கே செல்லுகின்றார்?
முன்தாங்கிச் சுமக்கும் அவர் யார்?

II. மறுமொழி.

1 அவர் பின் செல்லுங்கள் கல்வாரிக்கே
அவர் மாதேவனின் மைந்தனே.

2 அவரின் நேசரே நின்று, சற்றே
திவ்விய முகம் உற்றுப் பாருமே.

3 சிலுவைச் சரிதை கற்றுக் கொள்வீர் ;
பேரன்பை அதனால் அறிவீர்.

4 பாதையில் செல்வோரே, முன் எகிடும்
ரூபத்தில் காணீரோ சௌந்தர்யம்.

III. சிலுவைச் சரிதை.

1 குருசில் அறையுண்ட மனிதனாய்
உம்மை நோக்குகின்றேன் எனக்காய்.

2 கூர் முள் உம் கிரீடமாம் குருசாசனம்
சிந்தினீர் எனக்காய் உம் ரத்தம்.

3 உம் தலை சாயவோ திண்டு இல்லை ;
கட்டையாஞ் சிலுவை உம்மெத்தை.

4 ஆணி கை கால், ஈட்டி பக்கம் பாய்ந்தும்,
ஒத்தாசைக் கங்கில்லை எவரும்.

5 பட்டப்பகல் இதோ ராவாயிற்றே ;
தூரத்தில் நிற்கின்றார் உற்றாரே.

6 ஆ பெரும் ஓலமே ! தோய் சோரியில்
உம் சிரஞ் சாய்க்கிறீர் மார்பினில்.

7 சாகுங் கள்ளன் உம்மை நிந்திக்கவும்
சகிக்கின்றீரோ நீர் என்றாலும்.

8 தூரத்தில் தனியாய் உம் சொந்தத்தார்
மௌனமாய் அழுது நிற்கின்றார்.

9 'இயேசு நசரேத்தான் யூதர் ராஜா'
என்னும் விலாசம் உம் பட்டமா ?

10 பாவி என் பொருட்டு மாளவும் நீர்
என்னில் எந்நன்மையைக் காண்கின்றீர்.

IV. சிலுவையின் அழைப்பு.

1 நோவில் பெற்றேன், சேயே அன்பில் காத்தேன்
நீ விண்ணில் சேரவே நான் வந்தேன்.

2 தூரமாய் அலையும் உன்னைக் கண்டேன்;
என்னண்டை கிட்டிவா அணைப்பேன்.

3 என் ரத்தஞ் சிந்தினேன் உன் பொருட்டாய்
உன்னைக் கொள்ள வந்தேன் சொந்தமாய்.

4 எனக்காய் அழாதே அன்பின் சேயே;
போராடு மோட்சத்தில் சேரவே.

V. இயேசுவை நாம் வேண்டல்.

1 நான் துன்ப இருளில் விண் ஜோதியே
சாமட்டும் உம்பின்னே செல்வேனே;

எப் பாரமாயினும் உம் சிலுவை,
நீர் தாங்கின் சுமப்பேன் உம்மோடே.

2 நீர் என்னைச் சொந்தமாய்க் கொண்டால், வேறே
யார் உம்மிலும் நேசர் ஆவாரே?

4 இம்மையில் உம்மண்டை நான் தங்கியே,
மறுமையில் வாழச் செய்யுமே. ஆமென்.

31

1 இன்றேசுயிர்த்ததால், எக்காள ஓசையால்
விண்மண்ணின் ராஜாவானவரைப் போற்றிப்பாடுவோம்.

2 சம்மனசோர் போற்றும் துங்கன் ஏசுக்கென்றும்
இகலோக மீதிருந்தும் புகழ் ஓங்குவதாக.

3 என் சேனுபதியாய் என்முன் செல்வதற்காய்
மரித்து உயிர்த்தோர்களில் முதற்பலனுனர்.

4 கிறிஸ்துவுடன் நான் மரித்ததுண்டானுல்,
அவருடன் எழுந்திருப்பேன் என்றுநம்புவேன்.

5 இந்த நம்பிக்கை என்னிருதயந்தன்னை
நடத்திச் சீர்ப்படுத்தி நேராய் உம்மில் சேர்க்கவும்.

6 ஜெகநாதா நின்வார்த்தை இகம் பொய்யாப்படி
யூதர் அடக்கி முத்தரித்தும் உயிர்த்தெழுந்தீரே.

7 பொன்முடி யணிந்த இம்மானுவேலனே,
நின்போல் கிரீடம் நானுந்தரிக்கக் கிருபையளியும்.

32

1 இன்று கிறிஸ்து எழுந்தார்; அல்லேலூயா!
இன்று வெற்றி சிறந்தார், அல்லேலூயா!
சிலுவை சுமந்தவர் அல்லேலூயா!
மோட்சத்தைத் திறந்தவர். அல்லேலூயா!

2 அவர் வெற்றி கூறுவோம், அல்லேலூயா!
விண்ணின் வேந்தைப் போற்றுவோம்.
அல்லேலூயா!
அவர் தாழ்ந்துயர்ந்தாரே; அல்லேலூயா!
மாந்தர் மீட்பர் ஆனாரே. அல்லேலூயா!

3 பாடனுபவித்தவர், அல்லேலூயா!
ரட்சிப்புக்குக் காரணர்; அல்லேலூயா!
வானில் இப்போதாள்கிறார்; அல்லேலூயா!
தூதர் பாட்டைக் கேட்கிறார். அல்லேலூயா!
ஆமென்.

33

1 அல்லேலூயா! அல்லேலூயா! அல்லேலூயா!
இப்போது போர் முடிந்ததே;
சிறந்த வெற்றி ஆயிற்றே;
கெம்பீர ஸ்துதி செய்வோமே. அல்லேலூயா!

2 கொடூரச் சாவை மேற்கொண்டார்;
பாதாளச் சேனையை வென்றார்;
நம்ஸ்தோத்திரப் பாட்டைப்பெறுவார்
அல்லேலூயா!

3 இந்நாள் எழுந்த வேந்தரே
மாண்போடு அரசாள்வாரே;
களித்து ஆர்ப்பரிப்போமே. அல்லேலூயா!

4 எல்லாரும் உம்மைப் போற்ற நீர்
மரித்துயிர்த் திருக்கிறீர்;
சாகாத ஜீவன் அளித்தீர். அல்லேலூயா!
ஆமென்.

34

1 இயேசு உயிர்த்தெழுந்ததால்
சாவின் பயம் அணுகாது;
உயிர்த்தெழுந்தார்! ஆதலால்
சாவு நம்மை மேற்கொள்ளாது, அல்லேலூயா!

2 உயிர்த்தெழுந்தார்! மரணம்
நித்திய ஜீவ வாசல் ஆகும்
இதினல் பயங்கரம்
சாவில் முற்றும் நீங்கிப்போகும். அல்லேலூயா!

3 உயிர்த்தெழுந்தார் மன்னுயிர்க்காய்
ஜீவன் ஈந்து மாண்டதாலே,
இயேசுவை மா நேசமாய்
சேவிப்போம் அம்துள்ளத்தாலே.
அல்லேலூயா!

4 உயிர்த்தெழுந்தார்! பேரன்பை
ஏதும் நீக்க முடியாது;
ஜீவன் சாவிலும் நம்மை
அது காத்துக் கைவிடாது. அல்லேலூயா!

5 உயிர்த்தெழுந்தார்! வேந்தராய்
சர்வலோகம் அரசாள்வார்;
அவரோ டானந்தமாய்
பக்தர் இளைப்பாறி வாழ்வார். அல்லேலூயா!
ஆமென்.

35

1 இந்நாளில் ஏசுநாதர் உயிர்த்தார், கம்பீரமாய்
இகல் அலகை சாவும் வென்றதிக வீரமாய்,
மகிழ் கொண்டாடுவோம் மகிழ்கொண்டாடுவோம்.

2 போர்ச் சேவகர் சமாதிசூழ்ந்து காவலிருக்க
புகழார்ந் தெழுந்தனர், தூதன்வந்து கல்மூடிபிரிக்க.

3 அதிகாலையில் சீமோனோடு யோவானும் ஓடிட
அக்கல்லறையினின் றேகினர் இவர் ஆய்ந்துதேடிட,

4 பரிசுத்தனை அழிவுகாணவொட்டீர், என்றுமுன்
பகர்வேதச் சொற்படி பேதமற்றெழுந்தார் திருச்சுதன்.

5 இவ்வண்ணமாய்ப் பரன்செயலை எண்ணிநாடுவோம்
எல்லாருமே களிகூர்ந் தினிதுடன் சேர்ந்துபாடுவோம்.

36

பல்லவி

ஆமென், அல்லேலூயா! மகத்துவத் தம்பராபரா ;
ஆமென், அல்லேலூயா! ஜெயம்! ஜெயம்! அனந்த
ஸ்தோத்திரா.

அனுபல்லவி

ஆம், ஆஞதி தந்தார், வந்தார், இறந்
துயிர்த் தெழுந்தாரே உன்னதமே!.

சரணங்கள்

1 வெற்றிகொண் டார்ப்பரித்து,—கொடும்வே
தாளத்தைச் சங்கரித்து,—முறித்து;
பத்தராசனக் கிறிஸ்து—மரித்து,
பாடுபட்டுத் தரித்து, முடித்தார்.

2 சாவின்கூர் ஒடிந்து,—மடிந்து
தடுப்புச்சுவர் இடிந்து,—விழுந்து,
ஜீவனே விடிந்து,—தேவாலயத்
திரை ரண்டாய்க் கிழிந்து ஒழிந்தது.

3 வேதம் நிறைவேற்றி,—மெய்தோற்றி
மீட்டுக் கரையேற்றி,—பொய்மாற்றி,
பாவிகளைத் தேற்றி,—கொண்டாற்றி,
பத்தராசனத் தேற்றி வாழ்வித்தார்.

37

1 உன்னதத்தின் தூதர்களே ஒன்றாகக் கூடுங்கள்,
மன்னன் ஏசுநாதருக்கே வான்முடி சூட்டுங்கள்!

பல்லவி

ராஜாதி ராஜன் யேசு, யேசுமகா ராஜன்!—அவர்
ராஜ்யம் புவியெங்கு மகா மாட்சியாய் விளங்க,
அவர் திரு நாமமேவிளங்க,-அவர் திரு நாமமேவிளங்க
அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயாவே!
அல்பா, ஓமேகா, அவர்க்கே அல்லேலூயாவே!

2 நாலாதேசத் திலுள்ளோரே, நடந்து வாருங்கள்,
மேலோனேசு நாதருக்கே மெய்முடி சூட்டுங்கள்!

3 நல்மனதோடு சொல்கிறேன், நாட்டார்களே, நீங்கள்
புன்னகையோடு நிற்பானேன்? பூ முடிசூட்டுங்கள்!

4 இந்தியா தேசத்தார்களே, ஏகமாய்க் கூடுங்கள்,
சிந்தனையை வைத்துக்கொண்டு செம்முடி சூட்டுங்கள்!

5 சின்னநாடுகளை விட்டுச் சீக்கிரம் ஏகுங்கள்,
பொன்னகராம் சாலேமுக்குப் போய்முடி சூட்டுங்கள்!

6 குற்றமில்லாப் பாலகரே, கூடிக் குலாவுங்கள்,
வெற்றிவேந்த ரேசுவுக்கே வெண்முடி சூட்டுங்கள்!

7 யேசுவென்ற நாமத்தையே எல்லாரும் பாடுங்கள்
ராஜாதி ராஜன் தலைக்கு நன்முடி சூட்டுங்கள்!

8 சகல கூட்டத்தாரே, சாஷ்டாங்கம் செய்யுங்கள்,
மகத்வ ராஜரிவரே, மாமுடி சூட்டுங்கள்!

38

பல்லவி.

வந்தனம், ஜெயா, வந்தனம்—
எம் நிந்தை தவிர்த்த மைந்தனே.

அனுபல்லவி.

சந்ததம் உமக்கென்றைக்கும்—
சதாநித்ய காலமாகவே.

சரணங்கள்.

1 இம்மானுவேல் உயிர்த்தனர்
எம்பாவம் யாவும் தீர்த்தனர்
சம்பத்துடனே நாம் வாழவே
சகலமும் அவர் ஈந்தனர்.

2 சாவின்கூர் ஒடித்தனர்
சாத்தானை யழித்தனர்
பாவிஓடிவா வென்று
பட்சமா யழைத்தனர்.

3 விண்ணின் தூதர் யாவரும்
வேகமாயோடி வாரார்,
மண்ணிலுள்ள நாமும்போய்
அண்ணலை வணங்குவோம்.

4 யூதர்முகம் வாடிற்று
நாதனு ருயிர்த்ததால்,
ஜாதிகட்காய் மரித்த
ஜீவநாதா, யேசுவே.

5 பரதீசின் வழி திறந்தது
அரசாளும் காலம் வந்தது,
தரிசாய்க் கிடந்த நிலத்தின்மேல்
தமதாசீர்வாதம் பொழிந்தனர்.

6 அல்லேலூயா, ஸ்தோத்திரம்
அல்லேலூயா, கீர்த்தனம்,
அல்லேலூயா, என்றைக்கும்,
ஆனந்த கீதங்கள் பாடுவோம்.

எக்ஸெல்ஸியர் பவர்பிரஸ், மதுரை:-44.

Printed at the
Excelsior Power Press,
MADURA.